ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,913—1970 ජූලි 2 වැනි බ්‍රහස්පතින්ද—1970.7.2

14,913 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு யூலை மாதம் 2 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 551 | ஆதனவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 566 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 553 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 565 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 565 | நாணய அறிவித்தல்கள் .. .. .. | — |


### பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

1. படிகள்—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. சேவைக்குரிய நிபந்தனைகள்—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இந்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு ' நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் ' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விளம்பரதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எம். டபிள்யு. பீ. பீரிஸ்,
அரசாங்க அச்சகர்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 16 ந் உ.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க.ப.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சி சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்— விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### பகுதிநேர அறிவிப்பாளர்கள் (ஆங்கிலம்) வர்த்தக சேவை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பகுதிநேர அறிவிப்பாளர்கள் (ஆங்கிலம்) பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இலங்கையரிடமிருந்து கோரப்படுகின்றன. ஒரு மணித்தியாலத்திற்கு 2.50 சதம் என்ற விகிதத்தில் ஆகக்கூடியது ஒரு நாளைக்கு 20 ரூபாவரை, அமைய அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும். போக்குவரத்து அல்லது மற்றைய செலவுப்படிகள் எதுவும் வழங்கப்படமாட்டா.

2. விண்ணப்பதாரர்கள் வேதனமின்றி குறுகியகாலப் பயிற்சி பெறவேண்டும்.

3. தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் கூட்டுத்தாபனத்தின் ஒழுங்குமுறையிலான ஊழியர்கள் அல்லாத போதிலும் தேவைப்படும்போதும், அழைக்கப்படும்போதும் வேலைக்கு சமுகம் அளிக்கவேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் 18 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும், சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சை அல்லது வேறு உயர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். சுமாரான சிங்கள அறிவும் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும். டொரிங்ரன் சதுக்கத்திலுள்ள இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன காரியாலயத்தில் இருந்து 5 மைல்கள் சுற்றளவுக்குள்ளான தூரத்தில் விண்ணப்பதாரர்கள் வசிக்கவேண்டும். மேற்கூறப்பட்ட தகைமைகளுடன் ஏற்கனவே கூட்டுத்தாபனத்தில் வேலைபார்க்கும் ஊழியர்களும் இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

5. இந்த அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரங்களுக்கமைய தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் 17.7.1970ம் திகதிக்கு பிந்தாமல், மா அதிகாரி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், டொரிங்ரன் சதுக்கம், கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டா. விண்ணப்பப் பத்திரங்களைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பகுதிநேர அறிவிப்பாளர் பதவி (ஆங்கிலம்)" என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டா.

சுசில் முனசிங்ஹ,
மா அதிகாரி,
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

கொழும்பு 7,
1970 ம் ஆண்டு ஜூன் மீ 23 ந உ.

### மாதிரிவிண்ணப்பப் பத்திரம்

#### பகுதிநேர அறிவிப்பாளர் பதவி (ஆங்கிலம்)

1. முழுப் பெயர் : ————.
2. நிரந்தர தபால் விலாசம் : ————.
3. பிறந்த திகதியும், இடமும் : ————.
   (பிறப்புச்சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
4. 17.7.1970 இல் சரியான வயது— வருடம் : மாதம் : நாள் :
5. சாதியம் : ————.

6. கல்வித் தகைமைகள் : ——————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

7. தேர்ச்சித் தராதரம் (அ) ஆங்கிலம் : ——————.
(ஆ) சிங்களம் : ——————.
(இ) ஏனைய மொழிகள் : ——————.

8. ஒலிபரப்பு அனுபவம், வேறு விசேஷ தகைமைகள் சம்பந்தமான விபரங்கள் : ——————.

9. நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கியவர்களின் பெயர்களும், விலாசங்களும் : ——————.

10. தற்போது அல்லது இதற்கு முன்னர் வேறு பதவிகள் வகித்தால் அவற்றின் விபரங்கள்—சேர்ந்த திகதிகளுடன் : ——————.

——————,
கையொப்பம்.

திகதி : ——————.

7–155—2.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,913

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### யாழ்ப்பாண உப–பிரிவு

கிளிநொச்சி நீர்ப்பாசன உப பிரிவிலுள்ள கீழ்க் கூறப்பட்ட வேலைகளுக்கு, வவுனியாவிலுள்ள வட பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 27.7.70 திங்கட்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்பு உடன் திறக்கப்படும்.

| வேலைகளின் விபரம் | பதிவு செய்யப்பட்ட தொகை ரூபா | வேலைக்குத் தகுந்த கட்டணம் ரூபா |
|---|---|---|
| 1. (i) கோட்டைகட்டின குளத்தின் கீழ் நீர்ப்பாசன வசதிகள் செய்வதற்கு மிகுதி வேலைகள் செய்தல் .. | 15,500 .. | 25 |
| (ii) காரியாலை நாகபடுவான் இடதுகரைத் திட்டத்தின் கீழ் 1 ம் கிளை வாய்க்காலின் 1 ம் மைல் (0 மைல் தொடக்கம் 0 மைல் 31 சங்கிலி வரை) மிகுதி வேலைகள் செய்தல் .. | 15,500 .. | 25 |
| (iii) அம்பலப்பெருமாள் குளத்தின் கீழ் இடது கரை பிரதான வாய்க்காலின் விநியோக வாய்க்கால் கட்டுதல் .. | 19,000 .. | 25 |

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேற்கூறிய தொகைக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் மட்டும் இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்குரிய வெற்றுப்பத்திரங்கள் யாழ்ப்பாணம்/நீர்ப்பாசனப் பிரிவு, யாழ்ப்பாணக் கச்சேரி/மன்னார்/வவுனியா/முல்லைத்தீவு/வவுனிக்குளம் முதலிய நீர்ப்பாசனப் பொறியியலாளர்களின் கந்தோரிலும் அலுவலக நேரங்களில் 23.7.1970 பிற்பகல் 3 மணி வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்பொழுது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கலாமாவென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் மேற்கூறிய நீர்ப்பாசனப் பொறியியலாளர்களின் அலுவலகத்தில் வேலைக்கு மேற்கூறியவாறு தகுந்த கட்டணம் கேள்விக் கட்டணமாகச் செலுத்தப்படல் வேண்டும். இக் கேள்விக் கட்டணங்கள் ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்விக்குரிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் கிளிநொச்சியிலுள்ள யாழ்ப்பாண உப–பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

செ. சோமசுந்தரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
யாழ்ப்பாண உப–பிரிவு.

கிளிநொச்சி,
1970 ம் ௵ ஜூன் ௴ 7 ந உ.

7–122—2.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,913

---

## சுகாதார திணைக்களம்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1970 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1971 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ம் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம் ஏற்றுக்கொள்வார்.

2. (க) **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச் சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் போது எழுதி அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவைகளை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளவிருக்கும் சுகாதார சேவை அத்தியட்சர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்காணும் காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளலாம்.—சுகாதார சேவை அத்தியட்சகர் காரியாலயங்கள் அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா, குருனாகல். கேள்விகள் மூடப்படும் தினத்திற்கு முன்தினம் நண்பகல் 12 மணிக்குப் பின் கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படமாட்டா.

தகுதி விபரங்களையோ, அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுபணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டியமுறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்படவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடதுபக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும், முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது என்னிடமோ அல்லது கணக்காளரிடம் கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பத்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாக திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம்பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டு " பி " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச்செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரத்தில் அட்டவணை " சி " யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிடவேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி, அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்டகாலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச் சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப் பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையில் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப்படிவத்தில் உள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்கவேண்டும்.

13. **அரிசி.**—நோயாளிகளாலும், வேலையாட்களினாலும் ஒப்படைக்கப்பட்ட கூப்பன்களின் பொருட்டு உணவுத் திணைக்களத்திலிருந்து உதவிப் பண விகிதத்தில் அல்லது இலவசமாக அரிசி 19.12.66 ல் இருந்து பெறக்கூடியதாக அனுமதிச்சீட்டு நிலையத்தலைவரால் தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படும்.

யாழ்ப்பாணம்,
1970 ந் ஆண்டு யூன் மீ 21 ந் உ.

எஸ். இராசரத்தினம்,
சுகாதார சேவை அத்தியட்சகர்.

### குறித்த அட்டவணை

| (1) தாபனங்கள் | (2) கேள்விக் கட்டுப் பணம் | (3) பிணை வைப்புப் பணம் | (4) கேள்விகள் மூடப்படும் திகதி | (5) உணவுகள் அண்ணளவான தொகைகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வேலைக்காரர்கள் | | | | நோயாளிகள் | | | |
| | ரூபா | ரூபா | | மீன் | மாட்டிறைச்சி | கருவாடு | காய்கறி | மீன் | மாட்டிறைச்சி | கருவாடு | காய்கறி |
| நெடுந்தீவு அ. வை. சா. | 100 | 800 | | 400 | — | 200 | 900 | 800 | — | 400 | 1,500 |
| புங்குடுதீவு அ. வை. சா. | 100 | 600 | | 400 | — | 800 | 1,600 | 400 | — | 800 | 1,700 |
| பளை கி. அ. வை. | 100 | 600 | | 500 | — | 1,000 | 2,000 | 700 | — | 1,300 | 2,700 |
| சங்கானை அ. வை. | 100 | 600 | | 800 | — | 400 | 1,800 | 1,300 | — | 700 | 2,700 |
| கோப்பாய் அ. வை. | 100 | 600 | | 300 | — | 600 | 1,300 | 1,000 | — | 1,800 | 3,800 |
| பூனகரி கி. அ. வை. | 100 | 600 | 3.8.70 | 400 | — | 800 | 1,600 | 600 | — | 1,100 | 2,400 |
| பண்டத்தரிப்பு கி. வை./பி. வி. | 100 | 400 | | 300 | — | 600 | 1,200 | 400 | — | 800 | 1,600 |
| வட்டுக்கோட்டை கி. வை. | 100 | 800 | | 400 | — | 700 | 1,500 | 1,500 | — | 3,000 | 6,000 |
| செம்பியன்பற்று கி. வை. | 100 | 600 | | 300 | — | 600 | 1,200 | 500 | — | 1,200 | 2,200 |
| அச்சுவேலி கி. வை. | 100 | 600 | | 600 | — | 700 | 1,800 | 700 | — | 1,300 | 2,600 |
| மல்லாவி. அ. வை. | 100 | 600 | | 300 | — | 600 | 1,100 | 500 | — | 1,100 | 2,200 |
| நயினாதீவு அ. வை. | 100 | 600 | | 500 | — | 900 | 1,900 | 400 | — | 900 | 1,700 |

7–162—2.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,913

---

## அஞ்சல் தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துத் திணைக்களம்

**5,00,000 யார் பி.வி.சி. இரட்டைக் கேபிளும் 3,00,000 யார் செப்புக்கம்பியும் மைலுக்கு/70 ருத்தல் வழங்குதல்**

கொழும்பு 1, கோட்டை, அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் தலைமை அலுவலகக் கட்டிடத்தில், நிர்வாகப் பிரிவிலுள்ள, அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் திணைக்கள கேள்விச்சபைத்தலைவர், பின்வருவன வற்றை வழங்குவதற்கும் ஒப்படைப்பதற்குமான கேள்விகளை 1970 ஜூலை 27 ம் திகதி மு.ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

(1) 5,00,000 யார் பி. வி. சி. இரட்டை கேபிள் (ஒரு சோடிவகை).

(2) 3,00,000 யார் பி. வி. சி. செப்புக்கம்பி மைலுக்கு/70 ருத்தல்.

(3) 2,000 இரு வெறும் செப்பு எர்த்தவயர் 3/20.

கொழும்பு 1, கோட்டை, அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் தலைமை அலுவலகக் கட்டிட 5 ம் மாடியிலுள்ள பிரதான தந்திப்போக்குவரத்துப் பொறியியலாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில், இரட்டைப்பிரதிகளில் கேள்விப்பத்திரங்களைத் தயாரித்தல் வேண்டும். பி.த. பொறியியலாளரிடமிருந்து சகல விபரங்களையும் அறியலாம். அவரின் அலுவலகத்தில் கேள்விப்பத்திரச் சாதனங்களையும் பரிசீலனை செய்யலாம்.

ஓர் அஞ்சல் அலுவலகத்தின் அதிபருடன் அல்லது கொழும்பு 1, கோட்டை, ம. த. அ. தந்திக்கணக்காளரிடம் ரூபா 250 கேள்விக்கட்டுப் பணமாகக் கட்டி, அதன் பற்றுச்சீட்டை சமர்ப்பித்து விண்ணப்பிப்பவர்களுக்கு 1970 ஜூலை 20 ந் திகதி பி.ப. 12.00 மணிவரை பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளரின் அலுவலகத்தில் கேள்விப் பத்திரச் சாதனங்கள் வழங்கப்படும்.

வி. எம். அபயசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும்
தந்திப் போக்குவரத்து அதிபரும்.

நிர்வாகப் பிரிவு,
6 ம் மாடி,
அ. த. தலைமை அலுவலகக் கட்டிடம்,
லோற்றஸ் வீதி, கோட்டை, கொழும்பு 1.

7–57—2.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,913.

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

**17 சீலிங் மின்விசிறிகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்**

மேற்குறிப்பிட்ட சேவைக்குரிய கேள்விப்பத்திரங்களை 1970.7.17 ந் திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்வார்.

2. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி, 1970 ம் ஆண்டு ஜுலை மாதம் 16 ந் திகதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக் கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

3. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "17 சீலிங் மின்விசிறிகள் வழங்குதற்கான கேள்விப் பத்திரங்கள்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப் பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப் பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்றமுடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

6. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழு விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்டவேண்டும்.

7. தேர்வுபெற்ற கேள்விக்காரர் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெற முடியாது, தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

8. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்துள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1970.7.17 ந் திகதி முற்பகல் 11 மணிக்குக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

9. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபணையற்ற உரிமையுண்டு.

10. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ரீ. எஸ். சுப்பிரமணியம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஜூன் மீ 24 ந் உ.

CT/2/414

7–125—2.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,913

---

## இலங்கை மின்சாரச் சபை

**கொறெுவபத்தானையில் மஸ்கேலிய ஓயா திட்டம் I இன் கீழ் செலுத்தல் கோடு பராமரிப்பு குடிமனைகள் கட்டுவதற்கான கேள்விப்பத்திரம்**

1970 ம் ஆண்டு ஒகத்து மாதம் 10 ம் திகதி முற்பகல் 10.00 மணிவரை கொழும்பு 2 (த. பெ. இல. 540) இலங்கை மின்சாரச் சபையின் கேள்விச் சபைத் தலைவரால் மேற்கூறிய வேலைக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள கொந்திராத்து–சப்ளை இஞ்சினியரின் காரியாலயத்தில் பார்வையிடக் கிடைக்கும். கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் ரூபா 100 உம், கிரையம் ரூபா 5 உம் வெவ்வேறாக இலங்கை மின்சாரச் சபை சிறுப்பரிடம் கட்டப்பட்டு அவரிடமிருந்து பெற்றுக் கொண்ட 2 பற்றுச் சீட்டுக்களை கொந்திராத்து–சப்ளை இஞ்சினியர் காரியாலயத்தில் காட்டி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி நிபந்தனைகளின்படி கட்டுப்பணமாகிய ரூபா 100 உம் திருப்பிக் கொடுக்கப்படும்.

3. பொதுவேலைத் திணைக்களம் அல்லது வேறு அரசாங்க திணைக்களங்களிலோ அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்களிலோ ரூபா 1,00,000 க்குக் குறையாத கட்டிட வேலைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் மட்டுமே பதிவு அத்தாட்சி காட்டி விண்ணப்பிக்கலாம்.

4. மேற்கூறியபடி பெற்றுக் கொண்ட பத்திரங்களில் மாத்திரம் கேள்விகள் (இரண்டு பிரதி) அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஒகத்து மாதம் 6 ம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை வழங்கப்படும்.

5. 1970 ம் ஆண்டு ஒகத்து மாதம் 10 ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மேற்படி கேள்விச் சபைத் தலைவர் காரியாலயத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கும் பொழுது கேள்விக் காரர்கள் சமூகமாயிருக்கலாம்.

ரீ. டபிள்யூ. மென்டிஸ்,
பொது முகாமையாளர்,
இலங்கை மின்சாரச் சபை.

த. பெ. இல. 540,
கொழும்பு,
2.7.1970.

7–61/1—2.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,913

---

## இலங்கை மின்சாரச் சபை

**மதவாச்சியில் மஸ்கேலிய ஓயா திட்டம் I இன் கீழ் செலுத்தல் கோடு பராமரிப்பு குடிமனைகள் கட்டுவதற்கான கேள்விப்பத்திரம்**

1970 ம் ஆண்டு ஒகத்து மாதம் 10 ம் திகதி முற்பகல் 10.00 மணிவரை கொழும்பு 2 (த. பெ. இல. 540) இலங்கை மின்சாரச் சபையின் கேள்விச் சபைத் தலைவரால் மேற்கூறிய வேலைக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள கொந்திராத்து–சப்ளை இஞ்சினியரின் காரியாலயத்தில் பார்வையிடக் கிடைக்கும். கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் ரூபா 100 உம், கிரையம் ரூபா 5 உம் வெவ்வேறாக இலங்கை மின்சாரச் சபை சிறுப்பரிடம் கட்டப்பட்டு அவரிடமிருந்து பெற்றுக் கொண்ட 2 பற்றுச் சீட்டுக்களை கொந்திராத்து–சப்ளை இஞ்சினியர் காரியாலயத்தில் காட்டி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி நிபந்தனைகளின்படி கட்டுப்பணமாகிய ரூபா 100 உம் திருப்பிக் கொடுக்கப்படும்.

3. பொதுவேலைத் திணைக்களம் அல்லது வேறு அரசாங்க திணைக்களங்களிலோ அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்களிலோ ரூபா 1,00,000 க்கு குறையாத கட்டிட வேலைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் மட்டுமே பதிவு அத்தாட்சி காட்டி விண்ணப்பிக்கலாம்.

4. மேற்கூறியபடி பெற்றுக் கொண்ட பத்திரங்களில் மாத்திரம் கேள்விகள் (இரண்டு பிரதி) அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஒகத்து மாதம் 6 ம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை வழங்கப்படும்.

5. 1970 ம் ஆண்டு ஒகத்து மாதம் 10 ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மேற்படி கேள்விச் சபைத் தலைவர் காரியாலயத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கும் பொழுது கேள்விக் காரர்கள் சமூகமாயிருக்கலாம்.

ரீ. டபிள்யூ. மென்டிஸ்,
பொது முகாமையாளர்,
இலங்கை மின்சாரச் சபை.

த. பெ. இல. 540,
கொழும்பு,
2.7.1970.

7–61/2—2.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,913

## கேள்விப்பத்திர அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கீழ்க் குறிப்பிடும் வேலை செய்வதற்காக அரசாங்க அதிபர் (யாழ். மாவட்டம்), செயலகம், யாழ்ப்பாணம் அவர்களால் 2.8.70 ம் திகதி பிற்பகல் 2.30 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

### வேலை விபரம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கரைச்சி காரியாதிகாரியின் பிரிவிலுள்ள திருவையாறு படித்த வாலிபர் திட்டத்தில் பிரதான இணைப்பு வீதி அமைத்தல்.

2. மேலே குறிப்பிட்ட வேலை விபரத்திற்கு அரசாங்க திணைக்களங்களில் ஒப்பந்தக்காரர்களாகப் பதியப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரருக்கும், தொழிலாளர் சங்கங்களுக்கும், கிராமாபிவிருத்திச் சங்கங்களுக்கும், யாழ்ப்பாணக்கச்சேரி காணிக் கிளையிலிருந்து 27.7.70 ம் திகதி பிற்பகல் 3.00 மணி வரைக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப் படும். மேற்படி தகுதியுள்ள ஒப்பந்தக்காரர்கள் தமது ஒப்பந்தப் பதிவு பற்றிய அத்தாட்சிப் பத்திரங்களை யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திர வைப்புப்பணமாகச் செலுத்தப்பெற்ற ரூபா 25/- க்குப் பெறுமதியான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து, யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடமிருந்து பெறப்படும் இரு பிரதிகளைக் கொண்ட கேள்விப் பத்திரங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படும் பற்றுச்சீட்டு இவ்வறிவித்தல் விளம்பரம் செய்ததன் பின், செலுத்திப் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும். அனுமதிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திர வைப்புப்பணம், பிணையாகச் செலுத்தும் வைப்புப்பணங்களிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் மேல் கூறப்பட்டுள்ள சமர்ப்பணத்தைக் கொண்டே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

4. இரு பிரதிகளைக் கொண்ட கேள்விப்பத்திங்கள், பதிவு செய்யப்பட்ட அஞ்சல் மூலம் அரசாங்க அதிபர், யாழ் மாவட்டம் என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். மூடப்பட்டு சீல் வைக்கப்பெற்ற தபால் உறையின் இடதுபக்க மேல் உறையில் வேலையின் பெயர் குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரம் பதியப்பட்ட தபாலில் அனுப்பாதுவிடின் யாழ்ப்பாண செயலகத்திலுள்ள அலுவலக உதவியாளர் அறையில் இதற்கென வைத்திருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் கேள்விப்பத்திர முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ நேரில் கொண்டு சென்று சேர்க்கலாம்.

5. முதலாவது பந்தியில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்குப் பின்பு கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொண்டபின்பு மேற்கூறப்பட்ட விலாசத்தில் வைத்துத் திறக்கப்படும். கேள்விப்பத்திரக்காரர், கேள்விப்பத்திரங்கள் திறக்கும் சமயத்தில் பிரசன்னமாயிருத்தல் வேண்டும்.

7. எவராயினும் உடன்படிக்கை செய்யாத அல்லது வெளிப்படுத்தாத அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டதென எழுத்தில் அறிவித்தல் கிடைத்து 10 நாட்களுக்குள் அனுமதிக்கப்பட்டுள்ள பிணைப்பணத்தைச் செலுத்தாவிடின் செலுத்தப்பெற்ற கேள்விப்பத்திர வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

8. தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விப் பத்திரகாரர் ஒப்பந்த வேலையை சரிவரச் செய்வதற்கு அமர்த்தப்படும் நுட்ப வேலையாட்கள், மற்றும் பணியாட்கள் யாவரும் இலங்கைப் பிரசைகளாகவே இருத்தல் வேண்டும். அத்தகைய வேலையாட்கள் கூடுமானவரை வேலைத்தலத்திற்கு அருகாமையில் இருப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருடன் ஓர் ஒப்பந்தம் எழுதிக் கோரப்பட்ட தொகையில் 5 வீதத்தைப் பிணைப்பணமாகக் கட்டி ஒப்பந்தம் எழுதப்பட்ட திகதியிலிருந்து(2) இரண்டு மாதத்திற்குள் வேலையைப் பூர்த்தி செய்து கையளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவர்.

10. இவ்வேலை பற்றிய மேலும் ஏதேனும் தகவல் அறியவிரும்பின் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

11. குற்றப்பட்ட ஒப்பந்தக்காரர் பட்டியலிலுள்ளவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

12. யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் எவ்வித கேள்விகருக்கும் இடமின்றி இவ்வறிவித்தலிலுள்ள ஒரு பகுதியையோ அல்லது முழுப் பகுதியையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அதிகாரம் பெற்றுள்ளார்.

13. ' கேள்விப்பத்திரக்காரர்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் திறந்த திகதியிலிருந்து ஒரு மாதகாலம் வரையும் அமுலில் இருப்பதாகக் கருதப்படும்.

கே. பொன்னம்பலம்,
யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

காணிக்கிளை,
செயலகம், யாழ்ப்பாணம்,
1970 ம் ஆண்டு ஜுன் மீ 24 ந் உ.

7-133—2.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,913

---

## சௌக்கியத் திணைக்களம்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1970 ம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் செத்தெம்ப ாதம் 30 ந் திகதி 1971 (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சௌக்கிய சேவை அத்தியட்சகர், அநுராதபுரம் ஏற்றுக்கொள்வார்.

2. **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியில் எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவு செய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேலே குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள தங்கள் பதிவு இலக்கத்தை கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சௌக்கிய சேவை அத்தியட்சர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

மேலே இரண்டாம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத்தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சௌக்கிய சேவை அத்தியட்சர், அநுராதபுரம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம், அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால், அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்தபின்னர் தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டுப் " பீ " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை " சீ " யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களை குறிப்பிடவேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலைக்கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப்பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப்படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

13. (i) கேள்விக்காரர்களால் குறிப்பிடப்படும் வீதங்கள் ஒரு முழு உணவுச் சாப்பாட்டிற்கு $4\frac{1}{2}$ அவுன்ஸ் அரிசி அளவு வீதம் இரு சாப்பாடுகள் ஒரு நோயாளிக்கு விநியோகிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(ii) உணவு அட்டவணையில் அரிசியின் அளவு இப்பொழுதுள்ள 12 அவுன்ஸ் அரிசி அளவிலிருந்து 9 அவுன்ஸ் அரிசி அளவாகத் திருத்தப்பட்டிருக்கின்றபடியால் சோற்றுடன் விநியோகிக்கப்படும் பாண் 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து தேவைப்படமாட்டாது.

(iii) ஒரு இரு. 50 சதவீதம் இப்போதுள்ள விலையில் குறைக்கப்படாத வீதத்தில் உணவுக்கட்டுப்பாட்டதிகாரியினால் அரிசி விநியோகிக்கப்படும். கேள்விக்காரர்கள் அந்த அரிசிக்கு பணம் கொடுத்தல் வேண்டும். நன்கொடையாகவோ இனமாகவோ அளிக்கப்பட்ட அரிசி ஒப்பந்தக்காரர்களுக்குச் சமையலுக்கு விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்படாத வீதத்தில் அந்த அரிசியின் அளவு ஒப்பந்தக்காரரின் உணவுப்பணத்திலிருந்து கழிக்கப்படும். விலை குறைக்கப்பட்ட அரிசி விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் ஒப்பந்தக்காரர்கள் பணம் செலுத்துதல் வேண்டும். அந்த அரிசிக்கான கழிவு விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் விலை குறைக்கப்படாத அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு ஒப்பந்தக்காரர்களின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும்.

(iv) வேலையாட்கள் அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்களைக் கொடுத்தாலொழிய அவர்களுக்குப் பாண் உணவு விநியோகிக்கப்படும். அப்புத்தகங்களைக் கொடுத்தால் விநியோகிக்கப்படாத பாணின் விலை ஒப்பந்தக்காரரின் பணத்திலிருந்து பின்வருமாறு அறவிடப்படும் :

(அ) கூப்பனிலிருந்து பெறப்பட்ட அரிசி இன்றுபோன்று இனமாகவிருந்தால் விநியோகிக்கப்படாத பாணின் முழு விலையுங் கழிக்கப்படும்,

(ஆ) அந்தக் கூப்பன்களில் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் கொடுக்கப்படும் அரிசிக்கு ஒப்பந்தக்காரர் பணம் செலுத்தினால் விநியோகிக்கப்படாத பாணின் விலைக்கும் விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு அறவிடப்படும்.

எச். சீ. ஊ றகொட,
சௌக்கிய சேவை அத்தியட்சர்.

அநுராதபுரம்,
1970 ம் ஆண்டு யூன் மீ 23 ந் ௳.

## குறித்த அட்டவணை

